1981 ஏப்ரல் 21]

நரிப்பள்ளி ஆற்றின் குறுக்கே பாலம் சட்டும் திட்டம்.

*வினா எண். 818—திரு. சி. சபாபதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர்—திருவண்ணாமலை செல்லும் வழியில் நரிப்பள்ளி ஆற்றுக்கு இடையில் பாலம் அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதுக்கட்டத் திட்டம் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. சபாபதி: தலைவர் அவர்களே, அரூர் வழியாக திருவண்ணாமலை செல்லும் பாதையில் நரிப்பள்ளி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கலாம் என்று ஏதாவது உத்தேசம் அரசுக்கு உள்ளதா என்று கேட்க விரும்புகிறேன்? (பதில் இல்லை).

தாம்பிரபரணி ஆற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 819—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம்—தாம்பிரபரணி ஆற்றில் ஆழ்வார் திருநகரையும் ஆழ்வார்தோப்பையும் போக்குவரத்துக்கு இணைக்கும் வகையில் ஒரு பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எப்பொழுது நடைபெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். என். இராமசாமி: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் உள்ள அந்த ஆழ்வார்தோப்பையும் ஆழ்வார்திருநகரையும் இணைக்கக்கூடிய வகையில் ஒரு பாலம்